# கடற்கரைக் காட்சி

இயற்கைத் தாயின் கொடைகள் ஏராளம் அதனை விட அத்தாயின் வியத்தகு இயற்கைக் கோலங்கள் மனதையும் கண்ணையும் சுண்டி இழுக்கும் புனையா ஓவியங்களாக எம்மையெல்லாம் இன்பத்தில் ஆழ்த்துகின்றன. இப் பொறிமுறை உலகத்தில் மாந்தரெல்லாம் பொறிகளோடு பொறிகளாகத் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கின்றனர். அவர்களது உள்ளங்களும் கனத்துப் போகின்றது. இத்தகைய சூழலில் சற்று மனதிற்கு இன்பம் அளிப்பவையாக இந்த இயற்கைக் காட்சிகள் அமைகின்றன.

காலைக்காட்சி, மாலைக்காட்சி, மழைக்காட்சி, மலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, இயற்கைக் காட்சிகளாகும். இவற்றுள் கடற்கரைக் காட்சி பற்றிப் பார்ப்போம். கடல் இயற்கைத்தாய் எமக்களித்த மாபெரும் கொடையாகும். இத்தகைய கடலின் செயற்பாடுகள் வியக்கத்தக்கன. ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைத்தாற்போல் ஒழுங்காக வந்து கரையைத் தொட்டுவிட்டுச் செல்லும் அலைகளைப் பார்க்கும்போது கண்களுக்கு இனிமையாக இருக்கின்றது. அத்தோடு அக் கடலின் கரையில் நின்று அலைகள் வந்து எமது கால்களை நனைக்கும்போது உடல் மட்டுமல்ல உள்ளமும் குளிர்கின்றது. ஓயாத அலையாக வந்து வந்து சத்தமிட்டு மண்ணை முத்தமிடும். கடலின் மேற்பரப்பு வானமே ஆடையாகப் போர்த்தது போல் அழகான நீலநிறமாகக் காட்சி அளிக்கும். மாலை நேரத்தில் கடற்கரையில் நின்று கடலைப் பார்க்கும் போது கதிரவனின் மஞ்சள் ஒளி பட்டு பள பள என மின்னும் கடற்கரையில் நின்று கதிரவனின் எழுகையையும் கதிரவனின் மறைவினையும் காண எமது இரண்டு கண்களும் போதாது.

கதிரவன் மறையும் போது அடிவானம் செக்கச்செவேல் என செவ்வரத்தம் பூப்போல் சிவந்து காணப்படும். தங்கத்தகடு போல் கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாய் மறையும்போது கடல் கதிரவனை மெல்லமெல்ல விழுங்குவது போல் இருக்கும். மஞ்சள் வெய்யில் எம் மீது படும் போது எங்கள் முகங்களும் மஞ்சள் பூசியது போல் அழகாக இருக்கும். முகில் கூட்டங்கள் விதவிதமான உருவங்களாகக் காட்சியளிக்கும். சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடுவதும் வகை வகையான மணல் வீடுகள் கட்டி விளையாடுவதையும் பார்க்க அழகாக இருக்கும். உழைத்துக் களைத்த மக்கள் ஓய்வெடுக்கும் இனிய இடமாக கடற்கரை அமைந்திருக்கும்.

இயற்கையான குளிர் காற்று மெல்ல உடலைத் தழுவிச் செல்லத் தங்கள் குழந்தைகளின் ஓட்டத்தையும் ஆட்டத்தையும் பார்த்தபடி பெற்றோரின் மலர்ந்த முகங்கள். கடலை விற்போரும், குளிர்களி விற்போரும் இன்னும் பல வகையான உணவுகளையும் விளையாட்டுப் பொருட்களையும் விற்போரும் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் திரியும் போது அக் கடற்கரை ஒரு கலகலப்பான இடமாக மாறி விடும். தங்கள் கவலைகள் எல்லாவற்றையும் மறந்து அந்த நேரத்திலாவது மகிழ்ச்சியாக இருக்கத் துடிக்கும் மனங்கள். போட்டி போட்டுக் கடலில் நீந்தி மகிழும் சிறுவர்களும் பெரியவர்களும். கடலில் நடுவே தூரத்திலே நங்கூரமிடப்பட்டு நிற்கும் அழகான கப்பல். கதிரவன் மறைய வெள்ளி நிலா விளக்கேற்றத் தொடங்கும் நேரம். அங்காங்கு அகல் விளக்குகள் போல் கதிரவன் மறைவுக்குக் காத்திருந்து கண்சிமிட்டும் விண்மீன்கள். இரவு மங்கை வரப்போகிறாள் என்று கட்டியம் கூற இத்தனை நேரமும் கடற்கரையில் தம் பொழுதை மகிழ்வாகக் கழித்தவர்கள் வீடு செல்ல அணியமாகும் காட்சி கூட அழகுதான்.